10.ஆம் வகுப்பு–தமிழ்–வினா விடை,பொருள்கோள்–பணித்தாள்

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:

1)விடை---------- வகைப்படும்

அ)ஆறு ஆ)ஏழு இ)எட்டு ஈ)ஒன்பது

2) தான் அறியாதஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது------வினா

அ) அறியா வினா ஆ) ஐய வினா இ) ஏவல் வினா ஈ) அறிவினா

3)'பறந்தது வண்டா? பழமா? எனக் கேட்பது----------வினா

அ)அறிவினா ஆ)அறியா வினா இ) ஏவல் வினா ஈ) ஐய வினா

4) பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது ---

அ) கொளல் வினா ஆ) கொடை வினா இ) ஏவல் வினா ஈ) அறியா வினா

5)விடை வகைகளில் முதல் மூன்றும்----------விடைகள் ஆகும்'

அ) வெளிப்படை ஆ)மறை இ)குறிப்பு ஈ) இனமொழி

6)பாடுவாயா? என்னும் வினாவிற்குரிய எதிர்மறை விடையைத் தேர்ந்தெடு

அ) பாடுவேன் ஆ) பாடேன் இ) பாடிலன் ஈ) பாடிற்று

7)ஏன் பேருந்தை தவற விட்டாய்? என்னும் வினாவிற்குத் தாமதமாக வந்தேனென்று விடையளிப்பது---விடை

அ) உறுவது கூறல் ஆ) உற்றது உரைத்தல் இ) ஏவல் ஈ) இனமொழி

8)பொருள்கோள்----- வகைப்படும்

அ)5 ஆ)6 இ)7 ஈ)8

9) மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்

அற்று அற்று ஒழுகும் அஃது..... – இவ்வடிகள்குறிப்பிடும் பொருள்கோள்

அ)ஆற்றுநீர் ஆ) மொழிமாற்று இ) நிரல்நிறை ஈ) கொண்டு கூட்டு

10)ஒரு செய்யுளில் சொற்கள் முறை பிறழாமல் வரிசையாக அமைந்து வருவது ------ பொருள்கோள்

அ) ஆற்றுநீர் ஆ) நிரல்நிறை இ) மொழிமாற்று ஈ) கொண்டு கூட்டு

ஆக்கம்: வெ.க.வாசு, தமிழாசிரியர், அ.உ.நி,பள்ளி, தணிகைப்போளூர், இரா.பே.மாவட்டம்

LIVEWORKSHEETS